# குடும்ப நலச் செய்திக் கதிர்

மலர் - 9 இதழ் - 8

நவம்பர் - 1979

JL
Y:52:5m211,N71
N79.9-8
157884


குடும்பநலச்
செய்திக்கதிர்
மலர். 9
இதழ்-8
நவம்பர். 197



# உலகக் குழந்தைகள் ஆண்டென ஏன் பெயர் வைத்தனர்?

மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்
**திரு. ஆர். சௌந்தரராசன்**

**நல்ல நல்ல பிள்ளைகள்!**

குழந்தை பெற வேண்டாம் எனச் சொல்லுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். பிறக்கின்ற குழந்தைகள் எப்படி இருக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களே சொல்லியிருக்கின்றார்கள்.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி!"

என்று தான் பாடினார். ஆகவே அந்த நல்ல நல்ல பிள்ளைகள் என்பதற்கு ஆழமான பொருள் என்னவென ஆய்ந்தால், குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் புரியும். நோஞ்சானாக இருந்தால் அது நல்ல பிள்ளையா? மூன்று வயதிலேயே கண் தெரியாவிட்டால் நல்ல பிள்ளையா? ஐந்து வயதிலேயே 'லொக்கு லொக்கென்று' இருமினால் நல்ல பிள்ளையா? ஆக நல்ல பிள்ளை என்று சொன்னால் நல்ல திடகாத்திரமான உடம்பு உள்ள பிள்ளை—வலுவான பிள்ளை என்று பொருள். எட்டு வயதிலேயே கிருஷ்ணனைப் போல பிள்ளை இருக்க வேண்டும். கம்சனைப் போய் எட்டு வயதிலேயே கண்ணன் கொன்றான் என்றால் காரணம் என்ன? கண்ணனும், பலராமனும் இரண்டே பேர் தான் பிள்ளைகள். அதனாலே தான் வெண்ணெயாகத்தின்று கண்ணன் பெருத்தான். அவர்கள் குடும்பத்தில் பத்துப் பிள்ளைகள் இருந்திருந்தால், வெண்ணெய் கிடைக்காது. வெண்ணெய்க்குப் பதிலாக வேறு ஏதாவது மண்ணைத் தூக்கிக் கைகளில் கொடுத்திருப்பார்கள். ஆகவே குறைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால் நிறைந்த இன்பத்தோடுமட்டுமல்ல—நிறைந்த வலுவோடு மட்டுமல்ல—நிறைந்த வளத்தோடு மட்டுமல்ல, நிறைந்த பாதுகாப்போடு அந்தக் குழந்தைகளை நாம் வளர்க்க முடியும்.

ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையிலே இடைவெளி வேண்டும். இதைக்குடும்ப நலத் துறை சொல்லுகிறது. குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டாம்—குறைந்த அளவு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறீர்களே, அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இந்த ஆண்டில் அப்படிப் பேசலாமா என்று சிலர் கேட்கிறார்கள். உலகக் குழந்தைகள் ஆண்டு என எதற்காகப் பெயர் வைத்துள்ளார்கள் தெரியுமா? குழந்தைகளை வலுவோடு, சீக்கில்லாமல், நல்ல எதிர் காலத்திற்கு நம்பிக்கைதருகின்ற வைரம் பாய்ந்த உடம்போடு அந்தக் குழந்தைகளை உருவாக்க வேண்டும் என்பதற்காகத் தான் உலகக் குழந்தைகள் ஆண்டாக இந்த ஆண்டைக் கொண்டாடுகிறோம். குழந்தைகள் ஆண்டில் தான் குடும்ப நலத் திட்டத்திற்கு அதிகமான வேலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குழந்தைகள் எப்படி இன்று இருக்கிறார்கள்?**

இன்றைக்கு நம் நாட்டில் பிறக்கின்ற குழந்தைகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டால் ஒவ்வொரு குழந்தைக்கும், ஒவ்வொரு சீக்கு. காரணம் என்ன? நம் வீட்டில் எல்லோரும் பெருமை பேசுவார்கள். எங்க வீட்டிலே கட்டின தொட்டியை நாங்கள் அவிழ்ப்பதே இல்லை. தொட்டியிலிருந்து பிள்ளை இறங்கியதும் அடுத்த பிள்ளை தொட்டிக்குப் போகும். இப்படிப் பெருமை பேசுவார்கள். சில பேர் கிராமத்தில் பேசும் போது சொல்லுவார்கள், 'நமக்கு அதெல்லாம் கவலையே கிடையாது. வருஷம் போனாலும் போகுமே தவிர, பிள்ளை பெறுவது தவறாது.' என்பார்கள். அதில் ஒரு பெருமை அந்தக் காலத்திலே இருந்தது. இப்போது அப்படியில்லை. என் வீட்டில் இரண்டே பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்வதிலே தான் பெருமையிருக்கிறது. அதிகமான பிள்ளை என்றால் என்ன செய்ய முடியும்?

இன்றைக்குத் தாய்மார்களே நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். திருவிழாக்களுக்குச் செல்லும் தாய்மார்களுக்கு இரண்டே பிள்ளைகள் என்றால் கேட்பதை எல்லாம் வாங்கித் தருவார்கள். அதிகப் பிள்ளைகள் என்றால் அம்மா ஒரு பக்கமும், அப்பா ஒரு பக்கமும் பார்ப்பார்கள்.



இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி அரசு மருத்துவ மனைக்கு அக்டோபர் 15-ம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அமைச்சர்கள் திரு. ஆர். சௌந்தரராசன், திரு. காளிமுத்து, திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



159884
257

# அன்பே அன்னை தெரேசா!

வி. நாமதேவன், துணை இயக்குநர் (குடும்பநலம்-பொறுப்பு)

உலக சமாதானத்துக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு இந்தியாவிற்குக் கிடைத்துள்ளது! ஆம்! இந்தியக் குடிமகளாகத் தன்னை ஆக்கிக் கொண்டு 30 வருடங்களுக்கும் மேலாக ஆதரவற்ற ஏழை எளிய மக்களுக்காக அருந்தொண்டாற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை தெரேசாவுக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது என்றால், இந்தியாவுக்கே அப்பரிசு கிடைத்திருப்பதாகப் பொருள் கொள்வதில் தவறில்லை.

' அன்பே சிவம்! '
' Love is God '

என்பதை முழுக்க முழுக்க நம்பி, மெய்ப்பித்து வாழ்ந்து கொண்டிருப்பவர், சின்னஞ்சிறு உருவத்தையும், சிவந்த மேனியையும் கன்னங்களில் சுருக்கத்தையும் பெற்றிலங்கும் 69 வயது மூதாட்டி அன்னை தெரேசா!

'உலகத்தில் வாழும் ஏழை எளிய மக்களின் துயரங்களையும் துன்பங்களையும் அறிந்து நோபல் பரிசை வழங்கியிருக்கிறார்கள். இது இறைவன் ஏழைகளுக்கு அளித்துள்ள பரிசு', எனக் கூறியுள்ள அன்னை தெரேசா, 1910 ஆம் ஆண்டு அல்பேனியா நாட்டில் பிறந்து, 18 வயதில் கன்னியர் மடத்தில் சேர்ந்தார். ஆசிரியையாகப் பயிற்சி பெற்றுத் தொண்டாற்ற இந்தியாவுக்கு வந்தார். கல்கத்தாவில் உள்ள கிறித்துவக் கான்வெண்டில் ஆசிரியையாகப் பணியாற்றினார். தான் பணியாற்றிய பள்ளியைச் சுற்றிலும் இருந்த குடிசைப் பகுதிகளில் வாழ்ந்தோர் வறுமையிலும் துன்பத்திலும் வாழ்ந்து கொண்டிருந்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை.

''உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகள் ஏழைகளுக்கு எட்டாக்கனிகள் என்ற போதிலும், மனிதாபிமானத்தோடு மற்றவர்கள் தங்களிடம் கருணையும் அன்பும் காட்டி தங்களை நடத்த வேண்டும் என ஏழைகள் ஏங்கித் தவிக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது எனக்கு மிகுந்த வேதனை ஏற்படுகிறது'', என்று அன்னை தெரேசா கூறியிருப்பது, அவரது உள்ளம் ஏழைகளின் பால் எந்த அளவு ஈடுபாடு கொண்டுள்ளது என்பதை விளக்கும் !

ஏழை மக்களுக்கு நேரிடையாகத் தொண்டாற்ற விரும்பிய அவர், போப்பாண்டவரிடமிருந்து சிறப்பு அனுமதி பெற்று 1948-ல் கல்கத்தா குடிசைப்பகுதி ஒன்றில் பள்ளி ஒன்றைத் துவக்கினார். பின் அனாதை இல்லம் ஒன்றை ஏற்படுத்தினார். இது வளர்ந்து விரிவடைந்தது. இதன் உதவியால் 61 பள்ளிகள், 300 மருத்துவமனைகள், 65 உதவி நிலையங்கள் ஆகியவை இந்தியாவின் 50 நகரங்களில் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இப்போது அவர் துவக்கிய நிறுவனத்தில் ஆயிரக்கணக்கானோர் தொண்டுள்ளத்தோடு பணியாற்றி வருகிறார்கள். சமூக சேவை செய்கிற 'சமூக சேவகிகள்' எனத் தங்களைக் கூறிக் கொள்ளாத அவர்கள், தற்சமயம் 23 ஆயிரம் தொழு நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளும் ஒரு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்நிறுவனம் சராசரியாக இரண்டாயிரம் அனாதைக் குழந்தைகளைத் தனது பொறுப்பில் வைத்துக் கவனித்து வருகிறது. வெளிநாடுகளில் 28 இடங்களில் இந் நிறுவனம் இருந்து செயல்பட்டு வருகிறது.

'வாழ்வின் இறுதி நாட்களில் அநாதைகளாய் சாக வேண்டியிருக்கிறதே—நாதியற்றவர்களாகி விட்டோமே—இந்த நேரத்தில் ஆறுதல் கூறவும், ஆசுவாசப்படுத்தவும், இறந்தபின் நம் நம்பிக்கைக்கு ஏற்பச் சடங்குகளைச்



இளையான்குடி அரசு மருத்துவ மனைக்கான அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேருரையாற்றுகிறார்.





இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அரசு மருத்துவ மனைக்குரிய புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை, மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அக். 19-ம் நாள் நாட்டினார். நல்வாழ்வுத் துறை அமைச்சரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும் உடன் உள்ளனர்.

செய்யவும் யாரும் இல்லையே', என ஏங்கித் தவிக்கும் ஏராளமான ஏழைகளுக்கு அன்னை தெரேசா ஏற்படுத்தியுள்ள 'நிர்மல் இருதய்' என்னும் விடுதி அடைக்கலம் தருகிறது. நீங்கள் அநாதைகளல்ல என ஆறுதல் கூறி, இறக்கும்போது நிம்மதியளிக்கிறது எம்மதமும் சம்மதம் என்ற நிலையில் 'நிர்மல் இருதய்' செயல்படுகிறது. தான் கொண்டுள்ள மத நம்பிக்கையுடையோருக்கே நிர்மல் இருதய் உதவும் எனக் கூறாது அனைத்து மதத்தினரும் இந்நிறுவனம் மூலம் உதவி பெறும்படி செய்திருப்பது அன்னை தெரேசாவின் தனிச் சிறப்பு !

நோயுற்றவர்கள், ஊனமுற்றவர்கள், மரணத்தின் வாசலில் நிற்பவர்கள், தொழு நோயாளிகள் ஆகியோருக்காக ஆற்றும் தூய தொண்டிலேயே இறைவனைக் காண்பதாக அன்னை தெரேசாவும் அவரைச் சார்ந்தவர்களும் கூறுகிறார்கள்.

''நான் பசியால் வாடும்போது நீ எனக்கு உணவு தந்தாய். நான் தாகத்தால் தவித்தபோது நீ எனக்குத் தண்ணீர் கொடுத்தாய். நான் உடையின்றி துன்புற்றபோது நீ எனக்கு ஆடைதந்தாய். நான் நோயுற்று படுக்கையில் கிடந்தபோது அல்லது சிறையில் இருந்தபோது நீ என்னை வந்துபார்த்து ஆறுதல் சொன்னாய். என்னுடைய கடைசிச் சகோதரனுக்கு நீ எதைச் செய்திருந்தாலும், நீ எனக்கே அதைச்செய்தாய்'' இதுதான் அன்னை தெரேசாவுக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் விசுவாசம் !

வங்காளப் போரின்போது பாகிஸ்தான் சிப்பாய்களால் கற்பழிக்கப்பட்ட பெண்கள் மறுவாழ்வுக்காக அன்னை தெரேசா எத்தகைய அரும் பணியாற்றினார் என்பதையும், ஆந்திராவில் ஏற்பட்ட புயலால் மக்கள் துன்பமடைந்தபோது இவருடைய நிறுவனங்கள் உதவி செய்ய முன் வந்ததையும் யாரும் மறக்க முடியாது.

இன்றைக்கு நோபல் பரிசு பெற்றிருக்கும் அன்னை தெரேசா, ஏற்கனவே தன்னலமற்ற தன் தொண்டுக்காக வேறு பல பரிசுகளையும், விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். 1962ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் வழங்கிய பத்தாயிரம் டாலர் பெறுமான பரிசு ( Magsay Say Award ) அவருக்குக் கிடைத்தது.

1963-ஆம் ஆண்டு 'பத்மஸ்ரீ' பட்டத்தை இந்திய அரசு அவருக்கு வழங்கி பெருமைப்படுத்தியது. 23-வது போப் ஜான் அவர்களின் சமாதானத்துக்கான பரிசை, ஆறாவது போப் பால் அவர்களிடமிருந்து அன்னை 1971-ஆம் ஆண்டு பெற்றார். அதே ஆண்டில், மனித நலத்திற்குப் பெருந் தொண்டாற்றியவர் என்பதற்காக 'கென்னடி அனைத்து நாட்டு விருதும்' இவருக்குக் கிடைத்தது! இத்தனைக்கும் மேலாக நோபல் பரிசு பெற்றுள்ள இவர், நிறுவனத்துக்குவரும் ஏழை எளிய அனாதைகள் வெறும் கையோடு திரும்பாமல் தங்களுக்குப் பயனுள்ள ஏதாவது ஒன்றைப் பெற்றே செல்கிறார்கள். அவரது நிறுவனங்களின் கதவுகள் சாத்தப்படுவதே இல்லை !

அன்பினால் எதையும் சாதிக்கலாம் என நம்பும் அன்னை தெரேசா அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில்,

''இன்றைக்கு உலகம் தலைகீழாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் பெண்கள் தலை கீழாக, பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதுதான். பெண்கள் தங்கள் மனதை—நிலையைச் சரி செய்து கொள்ள வேண்டும். கணவருக்கும், குழந்தைகளுக்கும், சகோதரர்களுக்கும் அன்பு என்றால் என்ன என்பதை ஒரு மனைவிதான்—தாய்தான்—சகோதரிதான் சொல்லிக் கொடுக்க இயலும். அன்பே பெண் என, நல்ல பெண்களாக பெண்கள் அனைவரும் வாழவேண்டும் என்பதே என் ஆசை'', எனக் கூறியிருப்பது மனிதகுலத்தின்பால் அவர் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

நோபல்பரிசின் வாயிலாகக் கிட்டும் பணத்தை பரம ஏழைகளுக்கும், தொழு நோய்க்காரர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் பணியில் செலவிடப் போகிறேன் என அறிவித்துள்ளார் அன்னை தெரேசா! கருச்சிதைவுக்கு இவரது ஆதரவு இல்லை என்ற போதிலும் 'சிறுகுடும்ப நெறி' ஓங்கச் செய்வதில் இவரும், இவரது நிறுவனங்களைச் சார்ந்தோரும் நல்ல ஒத்துழைப்பு நல்கிப் பணியாற்றி வருகின்றனர். கல்கத்தாவில் மட்டும் இவர் அமைத்துள்ள 102 குடும்ப நலநிலையங்கள் சிறந்த பணியாற்றி வருகின்றன. ''1971-க்கும் 1978க்கும் இடைப்பட்ட காலத்தில் 11707 இந்து குடும்பங்களுக்கும், 5568 இஸ்லாமியக் குடும்பங்களுக்கும், 4341 கிறித்துவக் குடும்பங்களுக்கும் நாங்கள் உதவி இருக்கிறோம்'' என்று அன்னை தெரேசா கூறியுள்ளார் !

உலக சமாதானத்துக்குரிய 1979-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அன்னை தெரேசாவின் மூலம் முதன் முதலாக இந்தியாவுக்குக் கிடைத்திருப்பதற்காக, நாம் ஒவ்வொருவரும் பெருமைப் படலாம் !

வாழ்க அன்னை தெரேசா !
வளர்க அவரது தொண்டு ! !

கமுதி அரசு மருத்துவ மனைக்கான அடிக்கல் நாட்டு விழாவின் போது, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நிலத்திற்கான பத்திரங்கள் ஒப்படைக்கப்படுகின்றன.

# உரிமைகள் ஏது?

எஸ். முத்துராமலிங்கம்

அழகான கிராமம் வில்லூர். தெற்கே காளியம்மன்; வடக்கே வண்டார் குழலி அம்மன்; மேற்கே மூத்தாலம்மன்; கிழக்கே கருப்பசாமி! திசைக்கொரு காவல் தெய்வம். அன்று அந்த ஊரில் அம்மன் திருவிழா. ஊரிலே எங்கும் கொட்டு முழங்கியது. தமுக்கும், உறுமியும், பம்பையும் ஒலித்துக் கொண்டிருந்தன. வளையல் கடைகள்; வகை வகையான தின்பண்டக் கடைகள். சீரணி, அதிரசம், அப்பம், இனிப்புச் சீயம், காரச் சேவு இப்படி என்னென்னவோ ... கரகாட்டம்... ஒயிலாட்டம்......பொய்க்கால் குதிரையாட்டம், புலி வேஷம்......ஊரே ஊருணியில் திரண்டிருந்தது, அம்மனுக்கான கலசம் கட்டி சப்பரத்தோடு வருவதற்கு.

வடக்குத் தெருவில் வண்டார் குழலி அம்மன் கோவிலை நோக்கி அமைந்திருந்தது. அந்தக் குடிசை. அந்தக் குடிசையின் உள்ளே சிமிட்டி தண்ணி விளக்கு கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தது. கண்ணாத்தா கண்ணீரும் கம்பலையுமாய், அம்மனை வேண்டிக் கொண்டிருந்தாள். சாமியாடி சங்குவின் மனைவிதான் அவள். அவர்களின் நாலாவது பிள்ளை காளியப்பன் முக்கி முனகிக் கொண்டிருந்தான். குளிர் தாங்காமல் கச்சந்தியை இழுத்துப் போத்திக் கொண்டிருந்தான். நெத்தியிலே பத்துப் போட்டிருந்தாள் கண்ணாத்தாள்.

'தாயே! மகமாயி! நாங்க என்ன பாவம் செஞ்சோம்! மூணும் ஓச்சப்பட்டுப் போச்சு. இதையாவது காப்பாத்திக் கொடு. அவன் உடம்பு நெருப்பா இருக்கு. குத்தங்குறையிருந்தா பொறுத்துக்கோ. மேலைக்கு உனக்குக் குறையில்லாமல் செஞ்சுடுவேன்...... தாயே .....

அம்மனை நினைத்து வேண்டியவன் தன் தாயிடம் சொல்லி, பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுமாறு கூறி விட்டு வாத்தியாரிடம் ஓடினாள்.

ஓய்வு பெற்று கிராமத்தில் தங்கியிருக்கும் தங்கையா வாத்தியாருக்கு வைத்தியமும் தெரியும். அம்மனைத் தரிசித்து விட்டு அவர் அப்போதுதான் வீட்டு திண்ணையில் வந்து உட்கார்ந்திருந்தார். கண்ணாத்தா வந்து நின்றாள்.

வாத்தியார்: 'யாரது இந்நேரத்திலே......

கண்ணாத்தா: 'நான்தானுங்க, சாமியாடி சம்சாரம் கண்ணாத்தா!

வாத்தியார்: வாம்மா., வா...அம்மன் திருவிழா வாச்சே; ஆத்தாக் கோயிலுக்குப் போகலையா.

கண்ணாத்தா: ஆத்தா, அந்த சுகத்தைக் கொடுக்கலையே சாமி ... பயலுக்குக் காய்ச்ச நெருப்பா இருக்கு. அதான் உங்களைக் கூட்டிக்கிட்டுப் போக வந்தேன்.

வாத்தியார்: இந்தா புறப்படுறேன். அந்த அரிக்கன் லாந்தரே எடுத்துக்கம்மா.

இருவரும் ஊருக்குள் செல்லாமல் ஊரைச் சுற்றி வந்தனர்.

இரவுநேரம் நல்ல இருட்டு. வயல் வரப்புகளில் இருந்த தவளைகளின் சத்தம். நாய் ஒன்று எங்கோ ஊளையிடும் ஒலி. லாட்டு முழக்குச் சத்தமும் தொலை தூரத்தில். இத்தனைக்கும் நடுவே அமைதியாக நடந்து வந்தார் ஆசிரியர். ஆதங்கத்தோடு நடந்தாள் கண்ணாத்தா. ஆசிரியர் கண்ணாத்தாவின் குடும்பத்தைப் பற்றிக் கேட்டார். பேச்சு வளர்ந்தது.

கண்ணா: 'அவரு சாமியாடி, எங்களுக்கு முதல்லே இரண்டும் பெண்ணாப் போச்சு அப்புறம் ஆணு இரண்டு. மூத்த பொண்ணை ஐஞ்சு வயசிலேயே வீட்டு வேலைக்கு அனுப்பிட்டோம். பத்துப் பாத்திரம் தேச்சு, வீடு வாச பெருக்கி வேலை செய்யணும். அங்கேயே அது வயித்தைக் கழுவிக்கும்.

வாத்தி: ஐஞ்சு வயசுலே பள்ளிக்கூடம் அனுப்பலையாம்மா?

கண்ணா: அதுக்கெல்லாம் நமக்குப் பெளக ஏதுங்க. அடுத்ததை கணக்கப்பிள்ளை ஐயா வீட்டிலே விட்டேன். மூனாவது பய ஆடு மாடு மேய்க்கிறான்; நாலாவதும் அப்படித்தான்.

வாத்தி: பிள்ளைகளெல்லாம் பெரிசாயிருச்சே.

கண்ணா: மூத்தவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சு...... அதுக்கு நான் பட்டபாடு அந்த ஆத்தாளுக்குத்தான் தெரியும். அந்தப் பிள்ளை எட்டு வயசா இருக்கும்போது ஆத்தா பாத்தா. அதான் பெரியம்மை போட்டிருந்தது. ஊசி வைக்க இடமில்லாம அப்படி விளையாடியிருந்தா. வாழை இலையிலே விளக்கெண்ணெய் தடவிப் படுக்க வைச்சுருந்தோம். அதிலே அந்தப் பெண்ணுக்கு ஒரு கண்ணிலே பூ விழுந்து போச்சு. ஆத்தா குத்தம்.

வாத்தி: ஆத்தா குத்தமா? ஏன் அம்மைப்பால் வைக்கலையா.

கண்ணா: அம்மைப்பால் வச்சா மட்டும் ஆத்தா பார்க்க மாட்டாளா?

வாத்தி: 'ஆண்டவா....அப்புறம் சொல்லு'

கண்ணா: இரண்டாவது பிறக்கும்போதே ஊனமாய் பிறந்துச்சு......காது கேட்காது. அவங்க அப்பன் மேலே அதுக்கு உசிரு, ராவுலே அவரு ஒரு மாதிரி. எப்படியாவது எங்கிருந்தாவது ஒரு மொந்தை வேணும். ராவுலே பயமில்லாம நம்ம ஊர் மாந்தோப்பு தாண்டி, சுடுகாட்டுக்குப் பக்கத்திலே ஒத்தப்பனை இருக்கு பாருங்க. அங்கே போய் வந்திடுவார். அவருக்கும் இதுன்னா ரொம்ப இஷ்டம்.

வாத்தி: எப்படிபட்ட வேலை பார்க்கிறா அந்தப் பொண்ணு. பிஞ்சு வயசிலே......குழந்தை பெற்றதே அதுக்குத்தானே. அதுமேலே உசிராத்தானே இருப்பான். மூனாவது பையன் எப்படி......

கண்ணா: அத ஏன் கேட்கிறீங்க...அவன் பொறந்தப்போ நல்லாத்தான். மூணு நாலு வயசானப்ப, திடீர்னு ஒரு நாள் கண்ணு தெரியலைன்னான். நம்ம கிராமத்துப் பழக்கப்படி பச்சிலைச் சாறு எல்லாம் ஊத்தினேன். ஒன்னும் கேக்கலை. கண்ணிலே பூளை .... வலியெல்லாம்...அப்புறம் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கிட்டு ஓடுனோம்.

வாத்தி: கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்...... அப்படித்தானே.

கண்ணா: அது இல்லைங்க. டாக்டருங்க காப்பாத்திடுவாங்கன்னு சொன்னாங்க.

வாத்தி: ம்......என்ன ஆச்சு......

கண்ணா: ஒரு கண்ணுப் போச்சுங்க...........முன் கூட்டியே மருந்து வாங்கிக் கொடுத்திருக்கணும்ன்னு டாக்டர் சொன்னார். வாங்க சாமி......வீட்டை நெருங்கிட்டோம்.

பேசிக்கொண்டே வந்தவர்கள் வீட்டை அடைந்தார்கள். பங்குனி—சித்திரை வெயில் காலமாதலால் இரண்டாவதும் மூன்றாவதும் வாசலில் சாக்கு விரித்துப் படுத்திருந்தனர்.

அவர்களைப் பார்த்த ஆசிரியர், ஏன் இப்படி நறுங்கிப் போய் இருக்கிறார்கள்—தாய்ப்பால் குடித்து வளர்ந்தவர்கள்தானே என்றார்.

மூத்த பிள்ளைக்குத்தான் பால் கொடுத்தேன். அடுத்தடுத்துப் பெத்தப்போ எனக்கு முடியாமப் போச்சு. ......காப்பித் தண்ணி, தேத் தண்ணி அது. இதுன்னு கொடுத்துப் பிழைக்க வச்சேன் ...என்று கூறிய கண்ணாத்தா குனிந்து வருமாறு சொல்லி வாத்தியாரைக் குடிசைக்குள் அழைத்துச் சென்றாள்.

தங்கையா வாத்தியார் தரையில் உட்கார்ந்து நாடி பார்த்தார். பையனின் உடல் அனலாக இருப்பதை உணர்ந்து சந்தேகத்தோடு கால்களை தூக்கிப்பார்த்தார். எடுத்து நிறுத்தினார். கால்கள் விழுந்து விட்டன. விளங்கவில்லை என்பதுணர்ந்து 'கண்ணாத்தா நீ தொடுத்து வச்சது அவ்வளவுதான். உயிருக்கு மோசமில்லாமப் பார்த்துக்கிறேன். விடிஞ்சதும் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கிட்டுப் போ' என்றார். சாமி! என வீல் என்று கத்தி மகன் மேல் முகம் வைத்து அழுதாள் கண்ணாத்தா. அப்போது சலங்கையொலி கேட்டது. ஆம் குழந்தையின் தந்தை சாமியாடி சங்கு குடிசைக்குள் நுழைந்தான். திருவிழா முடிந்து மனைவி அழுது கொண்டிருப்பதையும், வைத்தியர் வந்திருப்பதையும் கண்டு 'மகமாயி' என அலறினான் சங்கு.

வாத்தியாரான வைத்தியர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார்.

'ஆடு குட்டி போட்டா—கோழி குஞ்சு பொறிச்சா—மாடு கன்று போட்டால் குடும்பத்துக்கு லாபம்.

குழந்தையொன்று குடும்பத்திலே பிறந்தால் பெற்றோர்களுக்குப் பொறுப்பும் கடமையும் அதிகம் என்று அர்த்தம்.

குழந்தைகள் உண்ண வேண்டியவைகளை உண்ண வசதி செய்து தரவேண்டும். உள்ளமும் உடலும் வளர உரியது எல்லாம் செய்து தர வேண்டியது பெற்றோர் கடமை. நல்ல கல்வி கிடைக்கச் செய்யவேண்டும். இருக்க இடமும் உடுத்தத் துணியும் தந்தாகணும். இது இல்லையே, அது இல்லையே என்ற ஏக்கத்திற்கு அவை ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நல்ல சுற்றுச் சார்பும் தூய்மையான தண்ணீரும் கிடைக்கச் செய்து கண்ணீர் விடாமல் காக்க வேண்டும்.

குழந்தைகள் அரும்புகளாக இருக்கும்போதே வாடாமல் வதங்காமல் வளரச் செய்யவேண்டும். பிஞ்சிலேயே நஞ்சு எண்ணங்கள் அவர்கள் உள்ளங்களில் தழைக்க அனுமதிக்கக்கூடாது. ஐஞ்சு வயதிலேயே வேலைக்கு அனுப்பி வெதும்பச் செய்யக்கூடாது. நோய் நொடிகளிலிருந்து குழந்தைகளைக் காக்க வேண்டும். சிறு குழந்தைகளைத் தான் கொடிய பல நோய்கள் தாக்கி, உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும். அவற்றைத் தாங்கும் சக்தி இல்லாமல் குழந்தைகள் துவண்டு போகும். கக்குவான் இருமல் வந்து விட்டால் அந்தக் குழந்தை நித்த நித்தம் செத்துப் பிழைக்கும். அப்படி அந்த நோய் வராமல் காக்க மூன்று நோய் தடுப்பு ஊசி போட வேண்டும். கக்குவான், தொண்டை அடைப்பான் இசிவு நோய் போன்ற கொடிய நோய்கள் குழந்தைகளைத் தாக்காது தடுத்து அவர்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தடுப்பு ஊசியை ஆஸ்பத்திரியில் இலவசமாகப் போடுகிறார்கள்.

மாலைக்கண் நோய் குழந்தைகளுக்கு ஏற்படாது இருக்க 'வைட்டமின் ஏ' மாத்திரை கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் நலம் காப்பதில் தனி அக்கறை காட்டி வரும் அரசு, கருவுற்ற காலத்திலிருந்தே கருவில் வளரும் குழந்தையின் நலத்தையும் தாயின் நலத்தையும் காப்பாற்ற அரும்பணி ஆற்றி வருகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு இசிவு நோய் வராமல் காக்கவும், இரத்த சோகை நோய் அவர்களுக்கு ஏற்படாது தவிர்க்கவும் உரிய மருந்துகள் எல்லாம் கொடுக்கிறார்கள். இவற்றையெல்லாம் பொது மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதோடு குழந்தைகள் பிறந்த பின்னால் அவர்களுக்குரிய பல உரிமைகளை தயங்காது வழங்கி வாழச் செய்ய வேண்டும். தந்தையும் தாயும் முழுமையான தொடர்ந்த அன்பைப் பொழியணும். சத்துணவு உரிய அளவு கிடைக்கச் செய்ய வேண்டும். மற்றவர் விரும்பும் குழந்தைகளாக அவர்களை வளர்த்து வாழச் செய்ய வேண்டும். நல்ல கல்வி கிட்டச் செய்ய வேண்டும். கல்வி கற்க வேண்டிய பருவத்தில் வேலைக்கு அனுப்பக் கூடாது. நாட்டுரிமையும், வீட்டுரிமையும் குழந்தைகளுக்குக் கிட்ட வேண்டும். வளமான வாழ்வு அவர்களுக்கு உறுதியாக்கப்பட வேண்டும். இத்தனையும் செய்து தரவேண்டியது பொறுப்புள்ள பெற்றோர்களின் கடமை.

இவை அத்தனையும் பெற்றிட வேண்டியது குழந்தைகளின் உரிமைகள்; என எங்கோ படித்தது வாத்தியார் தங்கையாவின் உள்ளத்தில் நிழலாடியது.

சிந்தனையிலிருந்து விடுபட்ட அவர், பொறுப்பற்ற பெற்றோர்கள் இருக்கும் வரை குழந்தைகளுக்கு உரிமைகள் ஏது?

'நாட்டுக்கு எதிர்காலம் ஏது?' என முனகிக் கொண்டே குடிசையை விட்டு வெளியேறினார்.

[சென்னை வானொலி நிலையத்தில் 18.10.79 இரவு தொழிலாளர் பகுதியில் ஒலிபரப்பிய சிறு கதை இது. நிலையத்தாருக்கு நன்றி.]

# தேசிய குடும்பநல விருதுகள்

தேசியக் குடும்ப நலத் திட்டத்தை மிகுந்த முனைப்போடு செயல்படுத்தி, வெற்றியை உருவாக்க வேண்டியவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, 1979-80ஆம் ஆண்டிற்கான பல தேசிய விருதுகளை இந்திய அரசு அறிவித்துள்ளது.

குடும்ப நல நிரந்தர சிகிச்சைகளை நடத்துவது, கருத்தடைவளையம் பொறுத்துவது, உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் தொகையைக் கூடுதலாக்குவது, தாய் சேய் நலத்திட்டத்தைச் செயலாக்குவது ஆகிய ஒவ்வொன்றிலும் வெற்றி ஈட்டும் மாநிலம் ஒவ்வொன்றிற்கும் முறையே, முதல் பரிசாக வாகைப் பதக்கமும் நற்சான்றிதழும் வழங்கப்படும். இரண்டாவது பரிசு பெறும் மாநிலங்களுக்குக் கேடயமும் நற்சான்றிதழும் கொடுக்கப்படும்.

நிரோத் விற்பனைத் திட்டத்தின் கீழ் அதிக அளவு நிரோத் விற்பனை செய்த கம்பெனிக்கு நற்சான்றிதழும் வாகைப் பதக்கமும் அளிக்கப்படும்.

மிகச் சிறந்த திட்ட வெற்றி ஏற்படுத்தும் இரயில் மண்டலத்திற்கும், இராணுவப்பிரிவிற்கும் தனித்தனியே கேடயமும், நற்சான்றிதழும் பரிசாகத் தரப்படும்.

தன்னியக்க நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் நிலையங்களுள் வெற்றி ஈட்டும் நிலையங்களும் பரிசுக்குரியவையாகும். மருத்துவ மனைகளுடன் இணைக்கப்பட்ட அத்தகைய நிலையங்களில் சிறந்த வெற்றி ஈட்டும் நிலையத்திற்கும், மருத்துவ மனைகளுடன் இணைக்கப்படா நிலையங்களில் பெரு வெற்றி ஈட்டிய நிலையத்திற்கும் தனித்தனியே ரூ. 5000/- ரொக்கப் பரிசும் நற்சான்றிதழும் கொடுக்கப்படும்.

சுரங்கத் தொழில், தோட்டத் தொழில் உள்ளிட்ட தனியார் அல்லது பொதுத்துறை தொழிலகங்கள் நடத்தும் குடும்ப நல நிலையங்களுள் எது சிறந்த வெற்றி குவிக்கிறதோ அதற்கு ரூ. 5000/- ரொக்கப் பரிசும் நற்சான்றிதழும் அளிக்கப்படும்.

அடுத்து 'குழுப் பரிசு' களையும் இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்தக் குழுப் பரிசுகளை வழங்க இந்திய நாடு நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று மண்டலங்களிலும் வெவ்வேறு மாநிலங்கள் இடம் பெறுகின்றன. நான்காவது மண்டலத்தில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ் நாடு, அந்தமான் நிகோபார் தீவுகள், இலட்சத் தீவுகள், பாண்டிச்சேரி ஆகியவை அடங்கும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் சிறந்த பணியாற்றி வெற்றி பெற்ற மாவட்டத்திற்கு பரிசு வழங்கப்படும். அப்படி நான்கு பரிசுகள் கொடுக்கப்படும். அதற்கான ரொக்கம் ரூ 1.50,000/-.

ஒவ்வொரு மண்டலத்திலும் பெரு வெற்றி பெறும் மாநகராட்சி, அல்லது நகராட்சிக்கு பரிசு வழங்கப்படும். அவற்றில் ஒன்று, ஐந்து லட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள பகுதிகளுக்குத் தரப்படும். ரொக்கம் பரிசு ரூ 1,00,000/-.

ஒரு லட்சம் மக்கள் தொகைக்கும் மேலான, அதே நேரத்தில் ஐந்து லட்சம் மக்கள் தொகைக்கும் குறைவான பகுதிகளுக்கு மற்றொரு பரிசு அளிக்கப்படும். ரொக்கப் பரிசு ரூ. 25,000/-.

ஒரு லட்சம் மக்கள் தொகைக்கும் குறைவான பகுதிகளுக்கும் நான்கு ரொக்கப் பரிசுகள் தரப்படும். ரொக்கம் ரூ. 10,000/- .

அடுத்து மாவட்டந்தோறும் சிறந்த வெற்றி ஈட்டும் ஊராட்சிக்கு ரூ. 5000/- ரொக்கப் பரிசாகக் கொடுக்கப்படும். மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பரிசு வீதம் அளிக்கப்படும் இப்பரிசுகளை, மாநில அரசுகளே நிர்ணயிக்கும்.

ஒரு முறை பரிசு பெறும் எந்த நிறுவனமும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மறுபடியும் பரிசு பெறத் தகுதியுடையவையாகா.

இந்திய அரசு அறிவித்துள்ள பரிசுகளை எல்லாம் தமிழகம் பெறும் வகையில் நல்வாழ்வு, மருத்துவ—குடும்ப நலத் துறை, மருத்துவக் கல்வித் துறைகளைச் சார்ந்த அனைத்துப் பிரிவு ஊழியர்களும் மற்ற எல்லாத் துறைகளைச் சார்ந்தோரும் மிகுந்த ஒத்துழைப்போடு முனைந்து பணியாற்றி வெற்றி ஈட்டுவர் என எதிர் நோக்கலாம்.




ஆறகாடு ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த குடும்ப நல மாபெரும் கூட்டத்தில், மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள் உரையாற்றுகிறார். குடும்ப நல விளம்பர அலுவலர் திரு. கோ. இராதாகிருஷ்ணன், மாவட்ட குடும்ப நல அலுவலர் டாக்டர் எஸ். பூர்ணய்யன் ஆகியோர் உடன் உள்ளனர்.



# கொழப்பலூரில் புத்தறிவுப் பயிற்சி முகாம்!

பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொழப்பலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், குடும்ப நலப் புத்தறிவுப் பயிற்சி முகாம் 12.10.79 அன்று திரு. சீனிவாசன் தலைமையில் இனிதே நடந்தேறியது.

பெரணமல்லூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பி. சந்திரன், அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து உரை நிகழ்த்தினார்.

மாவட்ட மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு. கோ. இராதாகிருட்டிணன், திரு. கே. வி. தட்சிணாமூர்த்தி, ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. பி. லட்சுமணன், கல்வி விரிவாக்க அலுவலர் திரு. கணேசன், மற்றும் மருத்துவ அலுவலர்கள் டாக்டர் ஆ. வெ. நற்குணன், டாக்டர் திருமதி எஸ். பிரேமகுமாரி, ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தொடர்ந்து, ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள், குடும்ப நல தாய் சேய் நலம் பற்றிய குழு விவாதத்தில் பங்கேற்றனா. இப்பயிற்சியின் மூலம், சுமார் 40 முன்னணித் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இதுவரை இவ்வாண்டு, இந்நிலையத்தில் 38 நபர்கட்கு அறுவை சிகிச்சையும், 5 தாய்மார்கட்கு, கருத்தடை வளையமும் பொருத்தப்பட்டன. தாய் சேய் நலத் திட்டத்தின் கீழ், முக்கூட்டு அம்மைப்பால் 365 குழந்தைகட்கும், இருநோய் தடுப்பூசி 670 குழந்தைகட்கும், இரும்புச்சத்து மத்திரைகள் 242 தாய்மார்கட்கும், 169 குழந்தைகட்கும், கண்ணோய்த் தடுப்பு மருந்து 234 குழந்தைகட்கும், இவ்வாண்டு இதுவரை வழங்கப்பட்டது.

# வட ஆற்காடு மாவட்டத்தில் 36 பயிற்சி முகாம்கள்!

வட ஆற்காடு மாவட்டத்தில் 36 குடும்ப நலப் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் திட்டமிடப்பட்டு பல ஊராட்சி ஒன்றியங்களையும் சேர்ந்த 1240 மக்கள் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊராட்சித் தலைவர்கள், இளைஞர் நற்பணி மன்றத்தலைவர்கள் (மத்திய அரசு நேரு யுவ கேந்திராவைச் சாந்தவர்கள்), குடும்ப நலத் திட்டத்தில் ஆர்வம் கொண்ட மாதர் சங்கத் தலைவிகள் மற்றும் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகிய 1240 பேருக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் குடும்ப நலப் பயிற்சி முகாம்களில் பயிற்சி தரப்பட்டது.



சென்னை கலைஞர் கருணாநிதி நகர் சிவலிங்கபுரத்தில், 29.10.79 அன்று இந்திய குடும்ப நலத் திட்ட சென்னை கிளையின் ஆதரவுடன் நடைபெற்ற குடும்ப நல புத்தறிவுப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்களில் ஒரு பகுதியினர்.

மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து குடும்ப நலத் திட்டத்தை மக்களிடையில் சிறந்த முறையில் பரப்ப இந்தப் பயிற்சி முகாம்களை நடத்த உத்தரவிட்டன.

குடும்ப நலத் திட்டம் என்பது ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்பாடு அடையச் செய்யும் திட்டம் என்பதனையும், மற்றும் தாய் சேய் நலம், தாய்மார்களின் உரிமை, கல்வி, பொது சுகாதாரம், சத்துணவு, நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினையும் பற்றி மக்கள் தலைவர்களுக்கு பயிற்சி முகாம்களில் போதிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சி முகாம்களை மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களது ஒத்துழைப்புடன் மாவட்ட குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நல அலுவலர் டாக்டர் எச். பூர்வய்யன் அவர்களும், மாவட்ட குடும்ப நல மக்கள் கல்வி மற்றும் தகவல் அலுவலர், திரு.கோ. இராதாகிருஷ்ணன் அவர்களும் முனின்று சிறப்புற நடத்தினர்.

# பயிற்சி முகாமில் அறுவை சிகிச்சை!

ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் 1979 அக்டோபர் மாதம் 6-ம் தேதி குண்ணவாக்கம் கிராமத்தில் குடும்ப நல புத்தறிவு பயிற்சி முகாம் நடைபெற்றது.

காலை ஆரம்பமான பயிற்சி முகாமில் மாவட்ட மக்கள் கல்வி மற்றும் தகவல் அலுவலர் திரு. கோ. இராதாகிருஷ்ணன் அவர்கள் கிராமங்களில் ஏற்பட்டு வரும் குடும்ப நலத் திட்டத்தின் மீதான பொது மக்களின் மன மாற்றத்தையும் தாய்மார்களின் பங்கையும் வெகுவாக பாராட்டினார். பயிற்சியாளர்களின் ஊக்கத்தை பாராட்டி அவர்களிடம் எதிர்பார்க்கும் சேவைகளையும் விளக்கினார்.

புலவர் திரு. கலைவாணன் அன்று புரட்டாசி மாதம் 3-வது சனிக் கிழமையானதால் வெங்கடாசலபதியையும் சிறு குடும்பத்தின் நலன்களையும் இணைத்துப் பேசினார்.

தலைமை தாங்கி கூட்டத்தை நடத்தித்தந்த முன்னாள் பெருந்தலைவர் திரு. என். கோபால கிருஷ்ண முதலியார் பேச்சாளர்களை அறிமுகப்படுத்தியும், இணைப்புரை கொடுத்தும் நகைச் சுவையோடு பேசினார்.

புத்தம் புதுமணமகனான பெரணமல்லூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஆர். சந்திரன் தமது வழக்கறிஞருக்கான திறமையுடன் தன்னுடைய புதிய குடும்ப வாழ்க்கையையும் தான் இரண்டு குழந்தைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப் போவதாகவும் பேசியது அனைவருடைய மனத்தையும் கவர்ந்தது.

மதிய இடைவேளைக்குப் பின்னர் மேலும் பல பேச்சாளர்கள் வந்து கலந்து கொண்டதும் பயிற்சியாளர் மற்றும் பொது மக்களது உற்சாகம் மேலும் வேகம் பெற்றது.

செய்யார் மாவட்ட கல்வி அதிகாரி திரு. க. அரங்கநாதன் தாம் 1967-ம் ஆண்டிலேயே குடும்ப நல முறைகளைக் கடைபிடித்து ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாகக் கூறினார்.

வந்தவாசி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பொன். முனுசாமி அவர்கள் தாது சிறப்புரையில் கிராமத்தின் ஏழை படுக்கெல்லாம் பரவி வரும் குடும்பநலத் திட்டத்தில் பெண்களின் பங்கு கணிசமானது என்றும் தாய்மார்களின் ஆதரவினால் எவ்வாறு குடும்ப நல முறை தீவிர மடையப் போகிறது என்பதையும் விளக்கி தாய்மார்களின் நலனை தமிழக அரசு எவ்விதமெல்லாம் பாது காக்கிறது என்பதையும் விளக்கினார்.

மருத்துவ அலுவலர் டாக்டர் ஜி. சிவனேசன் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

பயிற்சிக்கு வந்தவர்களில் ஒரு பயிற்சியாளார் தாமாகவே முன் வந்து அன்றைய தினமே ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டது பயிற்சியாளர்கள் மற்றும் பொது மக்களின் கவனத்தைக் கவர்ந்தது.

திரு. தவமுத்து அண்ணாமலை அவர்கள் நகைச்சுவையுடன் நாட்டின் இன்றைய மக்கள் தொகைப் பிரச்சினையையும் எதிர்கால விளைவுகளையும் விவரித்தது பயிற்சியாளர்களை சிரிக்கவைத்ததுடன் சிந்திக்கவும் வைத்தது.

ஆரம்ப சுகாதார நிலைய எழுத்தர் திரு. ஜி. டின்னையா ரெட்டி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. கண்ணப்பன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

———

# பெரியார் மாவட்டக் குடும்பநலத்திட்டச் செயலகம்

தந்தை பெரியார் அவர்களது நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ் நாடு அரசு, பெரியார் மாவட்டம் எனத் தனியொரு மாவட்டம் அமைத்து, ஈரோடு நகரத்தை அதற்குத் தலைநகராக்கியது.

பெரியார் மாவட்டத்திற்கு எனத் தனியொரு மாவட்டக் குடும்ப நலத் திட்டச் செயலகத்தை ஈரோட்டில் அமைப்பதற்கு தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஈரோட்டில் புதிதாக அமைக்கப் படும் பெரியார் மாவட்டக் குடும்ப நலத் திட்டச் செயலகத்தில் மாவட்டக் குடும்பநலதாய்-சேய் நல அலுவலரும், மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலரும் மற்றவர்களும் பொறுப்பேற்று மற்ற மாவட்டங்களைப் போல் இயங்குவர்.

பெரியார் மாவட்டத்திற்கு அளித்தது போல், புதுக்கோட்டை மாவட்டத்திற்கெனத் தனியாக மாவட்டக் குடும்ப நலச் செயலகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



போரூர் ஆரம்ப சுகாதார நிலையம் வானகரம் கிராமத்தில் நடந்த குடும்ப நல புத்தறிவுப் பயிற்சி முகாமில், திருமதி காந்தா, தான் கையாளும் காப்பர் T முறையை விளக்கிக் கூறினார்.

# ஊருணிபுரம் விழாவும் உழைப்பாளர் நாள் விழாவும்!



ஊருணிபுரம்......தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிற்றூர். இல்லை, இல்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் அது ஒரு கிராமம். ஆம்! அப்படிப் பட்ட ஒரு மயங்கிய நிலைதான் ஊருணிபுரத்தைப் பற்றி எண்ணும் போது தோன்றும். காரணம் ஊருணிபுரம் கிராமத்துக்குள் புதிதாகச் சென்று வலம் வந்த போது கண்ணுக்கெட்டிய குறிப்பிட்ட தூரம் வரை காட்டி 'இது தஞ்சைமாவட்டத்தைச் சார்ந்தது. அதற்கப்பால் உள்ளது புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தது,' என்றார்கள்.

மிகச் சிறிய ஊர். ஊரின் நடுவே செல்லும் சாலையின் மத்தியில் தான் வழக்கமாகக் கூட்டங்கள் நடத்துவார்களாம். தமிழகம் முழுவதும் செப்டம்பரில் எடுக்கப்பட்ட குடும்பநல இருவார விழாவையொட்டி, தமிழ் நாடு அரசு மருத்துவ, குடும்பநலத் துறையும், அகில இந்திய வானொலியின் சென்னை வானொலி நிலையத்தாரும் இணைந்து நடத்திய தேசியக் குடும்பநல இருவார விழா-கிராமியக் கலை விழா ஆகியவை அந்தச் சிறு கிராமத்தில் கடந்த 22-9-79-ஆம் நாள் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. வழக்கமாகப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும் சாலையின் நடுப் பகுதி இந்த விழாவிற்குப் போதாது எனக் கருதி, குடும்பநல விளம்பரத் துணை இயக்குநர் திரு. வி. நாமதேவன் அவர்கள் தலைமையில் சென்னையிலிருந்து சென்றிருந்த குடும்பநல விளம்பரப் பிரிவு அலுவலர்களும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரது வளர்ச்சிப்பிரிவு நேர்முக உதவியாளர் திரு. ஆர். சுப்பாராமன் அவர்களது தலைமையில் வந்த ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களும் வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து, திடலாக்கி பல்லாயிரக்கணக்கான மக்கள் இருந்து விழாவைக் கண்டுகளிக்கத் தக்க வாய்ப்பை ஒரிரு நாட்களில் உருவாக்கியது, அவர்களும் அவர்களோடு இணைந்து பணியாற்றியவர்களும் ஓய்வு, உறக்கமின்றி நல்கிய கடும் உழைப்புக்குக் கிட்டிய வெற்றி எனலாம்.

அத்தகைய ஒருங்கிணைந்த பணிக்கு வழிவகுத்த தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தொ. கங்கப்பா அவர்களது தொலை நோக்கும், இணைந்து பணியாற்றும் நிலையை உருவாக்கித் தந்த பாங்கும், காட்டிய ஆர்வமும் அன்றைய விழாவின் வெற்றிக்கு வழி வகுத்தது என்பது மிகைப் படுத்திக் கூறியதாகாது.

முதல் குழந்தையைத் தாமதப் படுத்துங்கள் !

இரண்டாவது குழந்தைக்கு இடை வெளி தாருங்கள் !!

மூன்றாவது குழந்தைக்கு முற்றுப் புள்ளி வையுங்கள் !!!

என்ற குடும்பநலக் கொள்கை முழக்கத்தோடு இவ்வாண்டு செப்டம்பரில் குடும்பநல இருவார விழா தமிழகம் முழுவதிலும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. இருவார விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்ததுதான் தஞ்சை மாவட்டம் ஊருணிபுரத்தில் எடுக்கப்பட்ட விழா!

விழா குறித்த விளம்பரங்கள் மாவட்டம் முழுமையிலும், சிறப்பாக ஊருணிபுரத்தை ஒட்டிய கிராமங்களிலும் செய்யப்பட்டது. விழா அன்று ஊருணிபுரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. சாலை நெடுகிலும் அலங்காரவளைவுகள் பல அமைக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ண மின் விளக்கு அலங்காரங்கள் பல! ஊருணிபுரத்தைச் சுற்றிலுமுள்ள பல்வேறு குக்கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அன்று அங்கே குழுமினர். ஊருணிபுரம் ஜனசமுத்திரமாகக் காட்சி அளித்தது.

அன்றைய விழாவில் முதலில் திருமூர்த்தி மோகன் ஆகியோர் நடத்திய விகடம் நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்துத் திரைப்பட இசை இயக்குநர் திரு. குமார் குழுவினர் வழங்கிய குடும்பநல இசை நிகழ்ச்சி நடந்தது. இதில் திரைப்படப் பாடகர்களான திருவாளர்கள் டி. எல். மகராசன், கோவை முரளி, சசிரேகா, பி. சாவித்திரி முதலியோர் மக்களைத் தங்கள் இசை வெள்ளத்தில் மூழ்கச் செய்தனர்.

மழையும் பெய்து கொண்டிருந்தது. எதையும் பொருட்படுத்தாது, இலவசப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏங்கியிருக்கும் மக்களுக்கென, கிராம மக்களின் முன்னேற்றத்தில் தனி அக்கறை காட்டி வரும் தமிழக அரசு



ஊருணிபுரத்தில் நடைபெற்ற குடும்ப நல இருவார விழா—கிராமியக் கலை விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகளில் ஒன்று.

ஏற்பாடு செய்த இருவார விழா நிகழ்ச்சியில் அமைதி காத்து ஆர்வம் காட்டிக் கேட்டனர் பொது மக்கள். இசை நிகழ்ச்சிக்குப்பின் குடும்பநல இருவார விழாக்கூட்டம் நடைபெற்றது.


தமிழ்நாடு அரசு குடும்பநலத்துறை உதவி ஆசிரியர் திரு. எஸ். முத்துராமலிங்கம் முன் மொழிய, தஞ்சை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. சேதுராமன் வழி மொழிய, இக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தொ. கங்கப்பா அவர்கள் தலைமை வகித்தார். குடும்பநல விளம்பரப் பிரிவு துணை இயக்குநர் திரு. வி. நாமதேவன் வரவேற்புரை ஆற்றினார். சென்னை மாவட்ட குடும்பநல விளம்பர அலுவலர் திரு. அப்பர் சுந்தரம் விழாவில் பேசினார்.

விழாத் தலைமையேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், உணவு உற்பத்தியைப் பெருக்க அரும்பாடு பட்டு உதவி வரும் தஞ்சை மாவட்ட மக்கள் வீட்டு உற்பத்தியைக் குறைக்கும் அரசு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இவ்விழாவில் கலந்து கொண்ட சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு. கந்தசாமி (துறைவன்) அவர்கள் வானொலி குடும்பநலப் பிரச்சாரத்தில் தன்னால் இயன்றது அனைத்தையும் செய்து வருகிறது எனச் சொல்லி வளமான வாழ்வுக்காக மக்கள் சிறு குடும்ப நெறி ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தமிழ் நாடு அரசின் மருத்துவ, குடும்பநலத் துறை இயக்குநர், டாக்டர் எனஸ்ட் டேவிட் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, தாய்-சேய் நலம் காக்கும் திட்டம் குடும்பநலத் திட்டம் என்றும், ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இந்திய அரசின் உதவியோடு இணைத்து அமைக்கப் பட்டுள்ள குடும்பநல நிலையங்களின் இலவசச் சேவையைக் கிராம மக்கள் முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்றார். குடும்பநல நிரந்தர சிகிச்சையால் எவ்விதத் தொல்லையும் நேராது எனக்கூறி, தகுதி வாய்ந்த தாய் தந்தையர் நிரந்தர சிகிச்சை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் குழுத்தலைவர் திரு. தங்கமுத்து தங்கள் கிராமத்தின் தேவைகள் சிலவற்றை நிறைவேற்றித்தர மாவட்ட ஆட்சித்தலைவரை வேண்டியதுடன், கிராம மக்கள் குடும்ப நலத் திட்டத்திற்கு முழு ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இறுதியாக விழாவைத் துவக்கி வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றிய, தமிழ் நாடு அரசு சட்ட மன்றக் கொறடா, திரு. துரை கோவிந்தராசன், எம்.எல்.ஏ. அவர்கள் குடும்ப நலத்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திப்பேசினார்.



ஊருணிபுரம் விழாவில் நடந்த இசை நிகழ்ச்சி.

குடும்பநலத்திட்டம் தந்தை பெரியார் அவர்களாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாலும் நீண்ட நெடுங்காலமாக மக்களிடையே பரப்பப்பட்டு வந்துள்ள திட்டம் என்றும், சமுதாய மறுமலர்ச்சிக்குக் குடும்ப நலத் திட்ட வெற்றி இன்றியமையாதது என நம்பி அவர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார்கள் என்றும் கூறிய அவர், அத்தகைய தலைவர்கள் போற்றி ஆதரித்த திட்டத்திற்கு மக்கள் பேராதரவு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பொதுவாகக் குடும்ப நலத் திட்டத்திற்கு எதிராக உள்ள மூட நம்பிக்கைகளையும், மற்ற வதந்திகள் ஏதாவது இருந்தால் அவற்றையும் நம்பக்கூடாது எனக் குறிப்பிட்ட அவர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்,

'மக்கள் தொகைப் பெருக்கம்
மதுவைப் போல் கேடு பயக்கும்'

எனக்கூறியிருப்பதின் முழுப் பொருள் உணர்ந்து, திட்ட வெற்றிக்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்துபேசிய அவர், இத்தகைய நல்ல நிகழ்ச்சிகளை நகர்ப்புறங்களில் நடத்துவதை விட்டு, கிராமப் புறங்களுக்கு எடுத்துச்சென்று, அதுவும் சிறு கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான கிராம மக்களைக் கூடச்செய்து, இசை நிகழ்ச்சியாலும்—நாடகத்தாலும், மற்ற வற்றாலும் திட்ட விளக்கம் அளிக்கும் நல்ல முறையை முதன் முதலாக உருவாக்கிச் செயல்படுத்தி வரும் குடும்பநல விளம்பரத் துறையினர் பாராட்டுக்குரியவர் எனச் சொல்லி, தான் அவர்களைப் பாராட்டுவதாகக் கூறினார். அவர் உரைக்குப் பின் இருவார விழாக் கூட்டம் முடிவுற்றது.

அடுத்து, திரைப்படப் புகழ் சிரிப்பு நடிகர் டணால் கே.ஏ. தங்கவேலு, திருமதி எம். சரோஜா குழுவினர் நடித்த 'சப்தஸ்வரங்கள்' நாடகம் நடைபெற்றது. இறுதியாக, விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவரும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரின் வளர்ச்சிப் பிரிவு நேர்முக உதவியாளருமான திரு. ஆர். சுப்பாராமன் அவர்கள் நன்றியுரையாற்றினார். 22-9-79-ஆம் நாள் இரவு தொடங்கிய நிகழ்ச்சிகள் 23-9-79-ஆம் நாள் காலை இரண்டு மணி வரை நடந்து, நாட்டு வாழ்த்துடன் இனிது முடிவுற்றது.

குடும்பநல இருவார விழா, முதலில் 16-9-79 முதல் 30-9-79 வரை நடைபெறும் என அரசால் அறிவிக்கப் பட்டிருந்தது. பின் இவ்விழாவை 15-10-79 வரை நடத்த அரசு அனுமதித்தது. இருவார விழா நடத்தப்பட்ட அதே நேரத்தில், தமிழகம் முழுவதிலும் இந்திய அரசின் தனி நிதி உதவியுடன் கிராமத் தலைவர்களுக்கான குடும்ப நலப் பயிற்சி முகாம்களும் நடத்தப் பட்டன. தொடர்ந்து நடத்தப்பட்டும் வருகின்றன.





1. தர்மபுரியில் 'அறு சுவை' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் நடுவர் டாக்டர் கோ. சமரசம், எம்.எல்.ஏ. அவர்கள் உரையாற்றுகிறார். 2. மருத்துவ அலுவலர் தலைமையுரையாற்றுகிறார். 3. திரு. மகராசன் 'புளிப்பு' என்ற சுவை பற்றி கவிபாடுகிறார். 4. ஒன்றிய ஆணையர் திரு. டி. கே. அசோகன் நன்றி கூறுகிறார்.

## சென்னையில் விழா

இருவார விழாத் தொடர்பாக சென்னை போர்ட் டிரஸ்ட் காலனியில் 15-10-79-ஆம் நாள் உழைப்பாளர் நாள், தொழிலாளர் நாளாக எடுக்கப்பட்டது. தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களிடையே குடும்பநலத் திட்டத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தப்பட்டது இந்த விழா! போர்ட் டிரஸ்ட் தலைவர் திரு. வி. செல்வராஜ், ஐ.ஏ.எஸ். அவர்களும் அலுவலர்கள் திரு. பாங்கோ, திரு. ஆறுமுகம் ஆகியோரும் மற்ற மற்ற அலுவலர்களும் இவ்விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கினர். தமிழ் நாடு அரசு குடும்பநலத் துறையும், போர்ட் டிரஸ்டும் இணைந்து நடத்திய இவ்விழாவில் திரைப்படப் புகழ் திருமதி. மனோரமா குழுவினர் நடித்த 'ஆண்டாள் அவள் ஆண்டாள்' நாடகம் நடத்தப்பட்டது.

நாடகத்தின் நடுவில் குடும்பநல இருவார விழாக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு போர்ட்-டிரஸ்ட் தலைவர் திரு. வி. செல்வராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை வகித்தார். குடும்பநல விளம்பரப் பிரிவு துணை இயக்குநர் திரு. வி. நாமதேவன் வரவேற்புரையாற்றினார்.

தலைமை உரையாற்றிய திரு. வி. செல்வராஜ் அவர்கள், தொழிலாளர்கள் குடும்ப நலத் திட்ட நிரந்தர சிகிச்சை ஏற்பதில் தயக்கம் காட்டக் கூடாது என்றும், வழக்கம் போல் நிரந்தர சிகிச்சை ஏற்கும் தங்கள் தொழிலாளர்களுக்குப் போர்ட் டிரஸ்ட், அரசு வழங்கும் ஈட்டுத் தொகையோடு கூட, ரூ.100/- வழங்கும் எனக்கூறினார்.

விழாவில் கலந்து கொண்ட மருத்துவ, குடும்ப நலத்துறை இயக்குநர் டாக்டர் எனஸ்ட் டேவிட் அவர்கள், குடும்பநல நிரந்தர சிகிச்சையால், கடின உழைப்புக்கு உள்ளாகும் தொழிலாளர்களுக்கு எவ்வித உடல் நலக் குறைவும் ஏற்படாது என்று சொல்லி, திட்டத்திற்குத் தொழிலாளர்கள் ஆதரவு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். சென்னை நகர குடும்பநல விளம்பர அலுவலர் திரு. அப்பர் சுந்தரம் நன்றி கூறினார். தொடர்ந்து நாடகம் நடந்தது. இறுதியில் நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது. இவ்விழாவில் பெருந்திரளாகக் கூடியிருந்த தொழிலாளர்களும், தாய்மார்களும் இறுதி வரை அமைதியாக இருந்து, நிகழ்ச்சிகளைக் கண்டு, கேட்டு ரசித்துத் திட்ட விளக்கம் பெற்றனர்.

—எஸ். முத்துராமலிங்கம்

159884

# குடும்பநலம், குற்றங்களைக் குறைக்கும்!

சு. ஸ்ரீபால், ஐ.பி.எஸ்
தலைமை விழிப்புப்பணி அலுவலர்
மின்வாரியம், சென்னை

இளமையில் மன நலம் பேணுவது, மன நலம் குறையாமல் பாதுகாப்பது, இரண்டும் மிகமிக இன்றியமையாதன. வளருகின்ற சிறுவர்களின் மன நலம் சீராக இருக்கிறதா என்பதில் இல்லத்தில் பெற்றவரும், பள்ளிகளில் ஆசிரியரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது செவிகளில் விழும் செய்திகளும் கண்களில் படும் காட்சிகளும் பன் மடங்கு மிகுந்து உள்ளன. இவற்றில் தீய விளைவுகளைத் தோற்றும் செய்திகளும் காட்சிகளும் இருக்கலாம். தீய விளைவுகளைத் தோற்றும் செய்திகளையும் காட்சிகளையும் ஏற்காமல் தள்ளக்கூடிய மன உரம் சிறுவரிடை இருக்க வேண்டும். இளைஞர் எவ்வாறு பாதிக்கப் படுகின்றனர் என்பதற்கு இங்கிலாந்து நாட்டில் எடுத்த புள்ளி விவரங்கள் நோக்கற்பாலன:

மக்கள் தொகை 10,000-ல் வழக்கு மன்றம் சென்ற சிறுவர் தொகை:

| | 14வயது | 15வயது | 16வயது |
|---|---|---|---|
| 1967 | 307 | 366 | 543 |
| 1968 | 331 | 383 | 601 |

15, 16 வயதுடைய சிறுவர்கள் மிகுந்த கவனத்துடன் வளர்க்கப் படவேண்டியவர்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இந்தச் சிறுவர்கள் சீராக வளர்க்கப்பட்டு, எதிர் காலத்தில் சிறந்த குடிமக்களாகத் திகழ்வதற்கு இல்லங்களும், பள்ளிகளும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். பள்ளிகளைவிட இல்லங்கள் முக்கியம். ஹீலி ப்ரானர் என்பவர் செய்த ஆராய்ச்சிகளின் பலனாக தகுந்த சூழ்நிலையை இல்லங்கள் உருவாக்க இயலாததற்குக் காரணங்கள் பின்வருமாறு :

1) அதிக குழந்தைகள்
2) வறுமை
3) பெற்றவர் கவனமின்மை
4) தாய், தந்தையர் எப்போதும் சண்டை போடுதல்
5) தாய், தந்தையர் குடிப் பழக்கம்
6) தாய், தந்தையர் தவறான நடத்தை உடையவராகஇருத்தல்
7) தாய், தந்தை இருவரும் வேலைக்குச் சென்றுவிடுதல்
8) தாயோ, தந்தையோ குற்றவாளியாக இருத்தல்
9) தாயோ, தந்தையோ மன நலம் இல்லாதவராக இருத்தல்.

இந்தக் காரணங்களில், முதலாவது காரணமாக வருவது ''அதிக குழந்தைகள்'' என்பது ஆகும். அளவான குடும்பம், குழந்தைகள் சீராக வளர்வதற்கு உரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குற்றம் நடந்து அதைக் கண்டு பிடிப்பதை விட குற்றமே நடவாமல் தடுப்பதே நாட்டிற்கு நல்லது. ஆயிரம் ரூபாய் களவு போய் விட்ட குற்றத்தில் இரு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கைது செய்து, விசாரணை நடத்தி, வழக்காடி, சிறையிலடைத்து மூன்று மாதமோ, ஆறு மாதமோ தண்டனை அளிப்பதில் ஆகும் செலவு பல



ஆயிரம் ரூபாய்கள் என்பதை நாம் உணரவேண்டும். குற்றங்களே நடவாமல் தடுப்பதில் முதல்படி சிறுவர்கள் சீராக வளர்க்கப் படுவது ஆகும்.

சிறுவர்கள் சீராக வளர்க்கப் படுவதற்கு அளவான குடும்பம் இருக்க வேண்டும். அப்போதுதான் குழந்தை வளர்ப்பில், அவர்கள் கல்வியில், அவர்களிடம் நல்ல நடை, உடை, பழக்க வழக்கங்களை உண்டாக்குவதில் பெற்றோர் முழு கவனம் செலுத்த முடியும்.

இங்கிலாந்து நாட்டில் ஆண்ட்ரி என்பவர் நடத்திய ஆராய்ச்சிகளின் புள்ளி விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன:

| ஒரு குடும்பத்தில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை | 8-18 வயதுடைய சிறுவர் எத்தனை விழுக்காடு குற்றம் செய்ததற்காகப் பிடிபட்டனர். |
|---|---|
| 1—2 குழந்தைகள் | 7.8 |
| 3—4 குழந்தைகள் | 8.1 |
| 5—7 குழந்தைகள் | 13.9 |
| 7-க்குமேல் | 20.0 |

அதிக குழந்தைகள் இருக்கும் இல்லம் கவனமின்மை, வறுமை போன்ற காரணங்களால் குழந்தைகளைக் குற்றங்களை நோக்கி எப்படி உந்துகிறது என்பதற்கு இந்த அட்டவணை ஒரு சான்று.

இந்தியாவைப் போன்ற வளருகின்ற நாடுகளில் நாம் இரு காட்சிகளைக் காணுகிறோம்:

1) வேலையின்மை
2) வேலை தேடி கிராமங்களில் இருந்து நகரங்கள் நோக்கி இடம் பெயரும் மக்கள் தொகை.

இந்த இரு சூழ்நிலைகளும் சமுதாயக் கட்டுக்கோப்பைப் பெரிதும் குலைக்கின்றன. கட்டுக்கோப்பு உள்ள ஒரு கிராம சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்து பழகும் சமுதாயத்தில் குற்றங்கள் நிகழ்வது அரிது. கட்டுக்கோப்பு குலைந்த நகர வாழ்க்கையின் சூழ்நிலை வறுமையும் கூடச் சேர்ந்து விட்டால் குற்றங்கள் தோன்ற ஏதுவான சூழ்நிலையாக மாறி விடுகிறது. நாட்டு அளவில் இந்த நிலைகள் மாற வேண்டும்; நல்ல சமுதாயம் அமைய வேண்டும் என்றால் குடும்ப அளவில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். குடும்ப நலத் திட்டம் ஏற்பது ஒன்று தான் நல்ல சமுதாயம், அமைய—குற்றங்கள் உருவாவதற்கான வாய்ப்புக்களைக் குறைக்கும் சமுதாயம் அமைய வழி கோலும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.





# மனோரஞ்சிதம்

டாக்டர் ஜோ. சமரசம்

சிந்தனை வானத்தில் சூடேற
செங்கனி கன்னத்தில் சிவப்பேற
எந்தனின் உள்ளத்தில் உவப்பேற
எழுச்சியாய் அவரிடத்தில் சென்றேன் ;
வந்தனை செய்திட்டேன் முதன்முதலாய் !
''வஞ்சி நீ வா'' என்றார் அருகினிலே !
சந்தனம் மணக்கின்ற சிற்றறையில்
சுகமதைக் கண்டிட சென்றிட்டேன்.

நல்லபழம் பாலுடனே தேன்போலே
நயமான இன்பத்து நினைவுகளில்
வல்லபலம் கொண்ட என் 'அவரும்'
வாகாக மெல்லணைத்து சொல்வார்
''சில்லென்ற பனிபோலும் கரம் கொண்ட
சின்னவளே ! எனக்கொரு ஆசையுண்டு ;
கொல்லென்று சிரித்திடவே நிறையபிள்ளை
கோதைநீ பெற்றிடல் வேண்டும்'' என்றார்.

''நெஞ்சுக்குள் தேனாக இனிப்பவரே !
நீர் சொன்ன படியேநான் பலபிள்ளை
கொள்ளையாகப் பெற்றாலே என்னுடலில்
கட்டழகு தங்கிடுமோ? கூறிடுவீர் !
அள்ளித்தான் நீருண்ணும் இவ்வழகு
அருகித்தான் போனாலே வெறுத்திடுவீர் !
பிஞ்சுக்குள் பழுக்கின்ற பழமாக
வெம்பித்தான் போகாதோ நம்வாழ்வு ?

ரஞ்சிதம் மனதிற்கு ரம்மியம் ; மனோ
ரஞ்சிதம் மங்கைக்கு இஞ்கிதம் ;
கொஞ்சிடும் மன்மத ரஞ்சித—மலருக்கு
குணமொன்று சிறப்பாக உண்டு ;
எம்மணம் நினைந்தாலும் அதையே—தருகின்ற
இணையற்ற தன்மைதான் கொண்டது ;
என்மனம் நினைப்பதுவோ ஒருபிள்ளை ;—அதுவும்
எழிலினிலே ரஞ்சிதமாய் இருக்கவேண்டும்.

குங்குமச் சிவப்பான நிறங் கொண்ட
குழந்தை யொன்று பிறந்தாலே போதாதோ ?
பொங்கிடும் பாலுக்கு நிகர் சொல்லும்
பிள்ளை மொழி கேட்டாலே நாமிங்கு
நாளெல்லாம் உழைக்கின்ற அலுப்பேதான் தீராதோ !
நினைவெலாம் அன்பாலே நிறைந்திடுமே !
தோளெல்லாம் புரண்டோடி ஆடுகின்ற
தங்கநிற மதலைதான் ஒன்று போதுமே !

மனமென்னும் குருட்டுப் பூனை விட்டத்தில்
இலக்கின்றிப் பாய்வது இயல்பேதான் ;
தினமெல்லாம் பல்வேறு அலுவ லினால்
தாவிப் பாய்வதுவும் சொந்தம்தான் ;
இரவென்னும் உயிர்விளக்கு எரியும் போது
விட்டிலென ஆசைகள் வீழ்வதுவும்
உறவென்னும் தேனுக்கு அலைவதுவும்
வியப்பில்லை ; அதுதானே வாழ்க்கை?''
என்றேன்,

''மனோகரம் பூத்திடுமிந் நாளிலே—என்
மனோரதம் நிறைவேறும் வேளையிலே
வினோதமாய் நீயுரைத்து பொழுதினையே—இனி
வீணாகக் கழிப்பதிலே பொருளில்லை ;
கற்பனையில் நான் கண்ட கோலங்களை—நீ
குலைத்திடவே எண்ணிடுதல் அழகாமோ ?
பொற்பனைய அழகுடனே யாகங்கள்—நான்
புரிந்திடவே வேண்டுமினி பூங்கொடியே !

நினைக்கின்ற மனத்தினையே தருகின்ற
நல்லகுணம் கொண்டவொரு மலரென்றாய்;
எனக்கென்று இருக்கின்ற ஆசைதனை
ஏந்திழையே ! நிறைவேற்ற வழிதருமோ ?
அணைக்கின்ற இன்பமான பொழுதுகளை
அளவின்றித் தருகின்ற 'தரு'வாமோ ?
இணைக்கின்ற பந்தத்தின் தலைவன்நான் ;
இனியுனக்கு என்சொல்லே வேதவாக்கு.

மணக்கின்ற மருக்கொழுந்து போலபிள்ளை
மூன்றேனும் நான்கேனும் பெறவேண்டும்;
பிணக்கின்றி நம்வாழ்வு சுவைப்பதற்குப்
பிரியமாக நீயிதை நிறைவேற்று.
கணக்காக ஒருபிள்ளை பெற்றாலே
காணுகின்ற என்நண்பர் கேலியாக
''பணக்காரன் ! இவனுக்குஇ திலும்கஞ்சம் !''
என்றேதான் சொல்லிடுவார்: 'கூடாதெ'ன்பார்.

''தங்கமென வெள்ளியென குவிந்தாலும்
தீர்ந்தேதான் போய்விடும்; பிள்ளைகள்
கணக்கின்றிப் பிறந்தாலே ! அதனால்தான்
கண்ணுக்குக் கண்ணாக ஒருபிள்ளை
சிங்கமெனப் பிறந்தாலே போதுமென்பேன்
செம்மாந்து வாழ்ந்திடுவோம் நாட்டினிலே !
குணக்குன்றாய் ஒருமகனை வளர்த்தாலே
கண்டிடுவோம் வசந்தமான வாழ்வினையே !

மனதுக்கு கெட்டியான உறையொன்று
    மாட்டிடவே வேண்டுமிக் காலத்திலே!
'தனதுக்கு' ஏனிந்த கட்டுப்பாடு?
    தொல்லைதான் இதுபோல இருப்பது
என்றேதான் சிலருக்கு சந்தேகம்!
    இதனாலே வருவதோ பெருந்துன்பம்!
நன்றேதான் சொன்னாலும் பலருக்கு
    நினைவினில் இருப்பதில்லை; உழல்வார்!

முல்லையோ நெருஞ்சியோ தாமரையோ
    அனிச்சமோ குறிஞ்சியோ கனகாம்பரமோ
அல்லியோ ஏனைய மலரினமோ;
    அவையிங்கு வாடினால் மணம்போகும்
எல்லையிலா மணந்தரும் மனோரஞ்சிதம்
    இதுபோல் வாடியே கருகிடினும்
சொல்லவிலா மணம்தன்னைத் தந்திடுமே!
    சேர்ந்தவர்க்கு இன்பமதை விண்டிடுமே!

அதுபோலப் பிள்ளையொன்று பெற வேண்டும்;
    அழகாக நடமாட விட வேண்டும்;
இதுபோல நமக்கொன்று பிறக்காதோ
    என்றோதான் இவ்வுலகம் நினைத்திடவே
வளமான காலங்கள் வரவுகூற
    வாழ்ந்திடவே வேண்டும்; அதுபெருமையன்றே?
நளபாக சமையலாக வாழ்வுசிறக்க
    நாமிங்கு அளவாகப் பெறவேண்டும்.

ஏட்டிக்குப் போட்டியாக ஏகப்பட்ட
    பிள்ளைகள் பெற்றதினால் இந்நாட்டில்
வேட்டிக்கும் சட்டைக்கும் தவிக்கின்ற
    வகையற்றோர் கோடிக்கும் அதிகமுண்டு.
நாட்டுக்கு இதனாலே நன்மையுண்டோ?
    நாளுக்கும் பஞ்சத்தால் தவிப்பதற்கோ
காட்டுக்குள் முளைக்கின்ற கணக்கற்ற
    கள்ளிபோல் அளவின்றிப் பெறுவதுவோ?''

என்றேதான் நானுரைத்தேன்; என்னவரும்
    ''எழிலரசீ! ஏற்றதையே உரைத்தாய்;
ஏற்றிடுவேன் உன்மொழியை! இனிமேலே
    எனக்கிதுபோல் ஓர்ஆசை வாராது;
போற்றிடுமோர் அறிஞன்போல் ஒருபிள்ளை
    பெறுவதுதான் இலட்சியம்; வாழ்க!''
                                        வென்றார்.
ஒன்றேதான் இறுதியிலே நான்உரைப்பேன்,
    ''ஒன்றேபெற்று நன்றே வாழ்வீர்!''

---

# காடிகொம்பில் பயிற்சி முகாம்

மதுரை மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடிக்கொம்பு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் 3.10.79 அன்று இரண்டலைப்பாறை கிராமத்தில் குடும்பநலத் திட்டப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இக்கிராமம் கிறிஸ்தவ வகுப்பினர் பெரும்பாலோரைக்கொண்டதாகும். முகாமில் ஆண், பெண்கள் உள்ளிட்ட 40 கிராமத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முகாமின் நோக்கம் பற்றியும், குடும்ப நலம், தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டத்தில் தற்போது கிடைக்கும் அரிய சேவை ஆகியவை குறித்தும் மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம், திண்டுக்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. லெட்சுமணன், தாடிக்கொம்பு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் திருமதி ஆயிஸா பீவி ஆகியோர் உரையாற்றினர்.

கிராமத் தலைவர்கள் பல்வேறு ஐயங்களைக் கேட்டனர். திரு. ஆர். கே. சம்பந்தம் அவர்கள் அத்தலைவர்களுக்குத் தகுந்த பதில் அளித்து, ஐயங்களைப் போக்கினார். ஐயம் தெளிந்த தலைவர்கள் அம்முகாம் முடியும் தருணத்தில் அக்கிராமத்தில் உள்ள இருதாய்மார்களை அறுவை சிகிச்சைக்கு அனுப்பிவைத்தனர். அத்தாய்மார்கள் திண்டுக்கல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அறுவை சிகிச்சைப் பெற்றனர். குடும்ப நலத் திட்டப் பயிற்சி முகாம் மக்களின் இதயங்களைக் கவர்ந்து இத்திட்டத்திற்கு நல்ஆதரவை தருவதில் சிறந்து விளங்குகிறது என்பதற்கு இந்நிகழ்ச்சியே உதாரணமாகும்.

---

**அட்டையில் :**

பயன் கருதாத தொண்டிற்காக 'நோபல் பரிசு' பெற்றுள்ள அன்னை தெரேசாவை, கள்ளங் கபடமற்ற குழந்தைகள் வாழ்த்துகிறார்கள்.






## காட்சி 15.

இடம் : ஊரின் ஒரு பக்கம்.

இருப்போர் : பன்னீர், கனகலிங்கம், தணிகாசலம், உமா.

[பன்னீரும் உமாவும் எதிர் எதிரே வருகிறார்கள்.]

உமா : யாரு, அத்தானா?

பன் : பணம்—பகலிலேயே கண்ணை மறைக்குதா?

உமா : உங்களெ என்ன சொல்றதின்னே எனக்குத் தெரியலே, அத்தான்!

பன் : எதுக்கு எதையாவது சொல்லனும்—விட்டுடு!

உமா : அப்படி விடவும் முடியலையே! மேற்குத் திசையை எந்நேரமும் பார்த்துக்கிட்டிருந்தா, அழகான சூரியோதயத்தை எப்படிப் பார்க்கமுடியும்? கிழக்குத் திசையா பார்வையைத் திருப்பினாதானே, அந்த அழகை ரசிக்க முடியும், அற்புதத்தை உணர முடியும்! எங்க அப்பாவின் மகளாகத்தான் எப்பவும் என்னைப் பார்க்கறிங்க! அதனாலே சடசட இன்னு பேசறிங்க—சிடுசிடு இன்னு பார்க்கறிங்க! உங்க அத்தை மகளா என்னைப் பாருங்க!

பன் : ஊகூம்! பார்க்கக் கூடாது! பார்க்கவும் மாட்டேன்!

உமா : ஏன்? பார்த்தா என்ன?

பன் : உறவு ஒட்டிக்கோவும்! பாசம் பற்றிக்கோவும்!

[அவன் சிரிக்க—அவளும் சிரிக்கிறாள்.]

உமா : எப்போ அத்தான், பட்டணத்திலே இருந்து வந்திங்க?

பன் : நேத்து வந்தேன், உமா!

உமா : பரீட்சையெல்லாம்............

பன் : பிரமாதமா எழுதியிருக்கேன்! பஸ்ட் கிளாசிலே பாஸ் செய்துடுவேன்!

உமா : காதிலே தேன் பாயறாப்பலே இருக்குது, அத்தான்!

பன் : இதையே உங்க அப்பா கேட்டாருன்னா, அவர் காதிலே நாராசம் பாயராப்பலே இருக்கும்!

உமா : எங்க அப்பாவெ நினைக்காமே உங்களாலே இருக்கவே முடியாதா? அவரெ நினைத்திட்டிங்கன்னா, முகம் சிவந்திடும், பேச்சுச் சூடாகிடும்.........

பன் : சூடானா என்ன, நீ குளிர்ச்சியாக்கி விடுவையே, சிரித்துப் பேசி!

உமா : எதையும் குளிர்ச்சியாக்கிடலாம்—உங்க மனசெ அப்படி ஆக்க முடியாதே—என்னாலே!

பன் : உன்னாலே முடியாதா? அப்போ வேற யாராலும் முடியாதுன்னுதான் அர்த்தம்! உமா! நான் முரட்டுத்தனமா பேசறதினாலேயே, உன் மேலே எனக்கு அன்பு இல்லேன்னு நினைச்சுட்டையா?

உமா : (ஆச்சரியத்தோடு) அன்பா? என்மேலா? உங்களுக்கா?

பன் : என் முகத்தைப் பார்த்துக் கேட்கறையே உமா—என், இதயத்தெ கேளு! அங்கே தான், எவ்வளவோ அன்பை, ஆசையை, அடக்கி வச்சிக்கிட்டிருக்கேன்!

உமா : எதுக்கு அப்படி அடக்கி வைக்கனுமாம்!

பன் : காலம் வரும்போது, கொட்டிவிடலாமின்னு தான்!

உமா : (சோகமாக) அதுக்கு இப்போ காலம் வந்திடிச்சி அத்தான்!

[அவள் கண்கள் கலங்குகின்றன.]

பன் : உமா! எதுக்குக் கண்கலங்கறே! உனக்கு என்ன கஷ்டம், அதெ சொல்லு! நீ சிரிச்சா—நான் முரட்டுப்போக்கா பேசுவேன்! அந்தப் பேச்சு உதட்டுப் பேச்சுத்தான்—உள்ளத்திலே இருந்து வரதில்லே! நீ அழுதா—என்னாலே தாங்க முடியாது, உமா! என்ன

நடந்தது? எதுக்கு அழறே? கண்ணீர் விடறே? ஏன் தயங்கறே? சொல், உமா!......... உமா சொல்லு!

உமா : எனக்கு............

[பேச முடியாமல் திணறி, அழுது கொண்டே தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொள்கிறாள். அவளது இரு கைகளையும் பிடித்து, அவன் கீழே இறக்குகிறான்.]

உமா : என் கையை விடுங்க, அத்தான்!

பன் : விடமாட்டேன்—ஏன் அழறே—அதைச் சொல்லு!

உமா : என் கையை விடமாட்டிங்களா?

பன் : விடமாட்டேன்!

உமா : என்னெ கைவிடமாட்டிங்களெ?

பன் : உன்னைக் கைவிடறதா? நானா? இப்படி நீ இதுவரை பேசினதே இல்லையே, உமா!

உமா : நீங்களும் பேசினதில்லே—நானும் பேசினதில்லே! ஆனா............

பன் : ஆனா...... நம்ப ரெண்டுபேர் மனதிலேயும் எவ்வளவு ஆசை பொங்கிக்கிட்டிருக்குதுன்னு, எங்க அப்பாவுக்கே தெரியுமே!

உமா : மாமா தெரிஞ்சிகிட்டிருக்கலாம்—ஆனா எங்க அப்பா தெரிஞ்சிக்கலையே!

பன் : உங்க அப்பாவும் தெரிஞ்சிக்கிறாரு—காலம் வரும் போது!

உமா : அதுக்குக் காலம் வந்திடிச்சி அத்தான்—அதனாலேதான் கேட்டேன், என்னெ கைவிடமாட்டிங்களேன்னு!

பன் : என்ன காலம் வந்திடிச்சி? உன்பேச்சே எனக்குப் புரியலையே!

[அவன் அவளது கைகளைவிட, அவள் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.]

உமா : பட்டணத்திலே எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்க!

பன் : (கோபச் சிரிப்போடு) மாப்பிள்ளையா? உனக்கா? நான் தொட்ட கையை, இன்னொருத்தனைத் தொடவிடுவனா? தொட்டிடத்தான் முடியுமா? உனக்கு எவன் மாப்பிள்ளெ பார்க்கிறது? சொல் உமா? அவன் கழுத்தை தெரிச்சி, கண்டதுண்டமா வெட்டிப் போடறேன்!...........

உமா : யார் பார்ப்பாங்க? எங்க அப்பாத்தான் பார்க்கிறாரு!

[அவள் கண்ணீர்விட—அவன் கன்னங்களை அவன் துடைத்துவிடுகிறான். அந்த நேரத்தில் அப்பக்கமாக கனலிங்கமும் தணிகாசலமும் வருகிறார்கள். அக்காட்சியைக் கண்டு, அவர்கள் ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிறார்கள்.]

பன் : அழாதே உமா! உன் அப்பாவைப் பத்தி நான் ஆத்திரமா பேசவனே, கோபமா திட்டுவனே—அப்போ எல்லாம் முகம் வாடுவையே! அவருக்காகப் பரிந்து பரிந்து நீ பேசுவையே! பார்த்தையா, பெத்த மகளையே தள்ள—அவர் குழி பறிப்பதெ!

உமா : இந்த ஆபத்திலே இருந்து என்னைக் காப்பாத்துவிங்களா, அத்தான்?

பன் : உன்னைக் காப்பாத்தறது இல்லே உமா—இது என்னெ காப்பாத்திக்கிறது! என் அப்பாவி மரியாதையை, என் குடும்பத்தின் மானத்தைக் காப்பதிக்கிறது! என் அத்தை மகளுக்கு மாலையிட உரிமை எனக்குத்தான் உண்டு! நான்தான் மாலையிடுவேன் மார்போடத் தழுவிக்கோவேன்! இதை எதிர்க்கிறவன்—தூளாவான்! தடுக்கிறவன்—பிணமாவான்! உமா! வாழ்ந்தா நாமிருவரும் ஒன்னா வாழ்வோம்—செத்தாலும் நாமிருவரும் சேர்ந்தே சாவோம்! உமா! நீ நிமிர்ந்து நில்—துணிந்து இரு!

உமா : நீங்க இருக்கச்சே—இனிமே எனக்கு பயமேது, துக்கமேது, துயரமேது அத்தான்!

பன் : நீ விட்டுக்குப் போ, உமா—இனி நடக்க வேண்டியதை நான் பார்த்துக்கிறேன்!

[அவளை விட்டு அவன் பிரிந்து செல்கிறான். அவன் செல்வதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டு நிற்கும் உமாவின் அருகில், கனகலிங்கமும் தணிகாசலமும் வருகிறார்கள்.]

கனக : (ஆத்திரத்தோடு) எத்தனை நாளா நடக்குது இப்படி?

உமா : (அதிர்ச்சியோடு) அப்பா!

கனக : பேசாதே! விட்டுக்கு வா! உன்னெ என்ன செய்யனுமின்னு எனக்குத் தெரியும்!

[ஆத்திரத்தோடு அவர் மகளின் கையைப் பிடித்து இழுத்துச்செல்ல, தணிகாசலம் பின் தொடர்கிறான்.]

—காட்சி முடிகிறது—



—வளரும்



1. மதுரை மாவட்டம் குட்லாம்பட்டி கிராமத்தில் நடந்த குடும்பநலத் திட்ட இருவார விழாவில் சோழவந்தான் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பாலகுருவா உரையற்றுகிறார்.

2. வாடிப்பட்டி விழாவில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. சுந்தரராஜன் அவர்கள்.

3. மதுரை மாவட்ட மக்கள் கல்வி செய்தி அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம் வாடிப்பட்டி விழாவில் உரையாற்றுகிறார்.

4. சொக்கலிங்க புரம் இருவார விழாவில் திரு. வி. அய்யாவு என்ற வெற்றாண்டி அம்பலம் உரையாற்றுகிறார்.

5. சொக்கலிங்கபுரம் விழாவில் திரு. மணியப்பன் அவர்கள்.

6. சொக்கலிங்கபுரம் விழாவில் கருங்காலக்குடி அரசாங்க மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு. சண்முகம் அவர்கள்.




















2. திரு. கே. ஏ. தங்கவேலு நடித்த 'சப்தஸ் வரங்கள்' நாடகத்தில் இரு காட்சிகள்.

இசை நிகழ்ச்சி.

விகட நிகழ்ச்சியில் ஒரு காட்சி.

குழுமியிருந்தவர்களில் ஒரு பகுதியினர்.










Printed and Published by Dr. ERNEST J. DAVID, M.B.B.S., Director of Medical Services and Family Welfare at No. 49, Pantheon Road, Madras 600 008 — State Family Welfare Press, 79/81, Anna Salai, Madras-600006
Editor: G. RADHAMANALAN Assistant Editor: S. MUTHURAMALINGAM